

# அம்பேத்கர் காமராசர்

## ஒரு வரலாற்று பார்வை

கொளத்தூர் மணி

# அம்பேத்கர்–காமராசர்

*ஒரு வரலாற்றுப் பார்வை*

**கொளத்தூர் மணி**

*வெளியீடு:*

**திராவிடர் விடுதலைக் கழகம்**

95 டாக்டர் நடேசன் சாலை
டாக்டர் அம்பேத்கர் பாலம்
மயிலாப்பூர், சென்னை-600004.

**தொடர்புக்கு:**

9841489896 / 9444025408/044-24980745

*மின்னஞ்சல் :*

**www.dvkperiyar.com / periyarmuzhakkam@gmail.com**

*அம்பேத்கர் - காமராசர் - சமூகநீதிப் பார்வையோடு 'நீட்' தேர்வின் அநீதிகளையும் விளக்கி திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆற்றிய உரைகளின் தொகுப்பு*

# அம்பேத்கரின் தனித்துவம்

புரட்சியாளர் அம்பேத்கரை நாம் எப்படி புரிந்து கொள்ள வேண்டும்? நாம் ஏன் அவரை மற்றவர்களிடம் இருந்து பிரித்து வேறுபடுத்தி தனித்துவமாக பார்க்கிறோம் என்பதில்தான் அம்பேத்கருக்கு பிறந்த நாள் எடுப்பதன் பலனாக இருக்கும். புரட்சியாளர் அம்பேத்கர் பல சிறப்புகளைக் கொண்டவர். அவர் ஒரு தாழ்த்தப்பட்ட வகுப்பில் பிறந்திருந்தாலும், வெளிநாடுகளுக்கு சென்று படிக்கிற வாய்ப்பினைப் பெற்றார். அங்கு போய் ஆய்வு பட்டங்களையும், பல உயர் பட்டங்களையும் பெற்றார். தத்துவ துறையில், பொருளியல் துறையில், சட்டத் துறையில் பட்டங்களைப் பெற்று திரும்பி வந்தார் என்றால் பெயருக்கு பின்னால் போட்டுக் கொள்வதற்காக அல்ல.

இந்த இந்திய சமுதாயத்தை திருத்த பலர் வந்தார்கள். இந்த சமுதாயத்தில் இருக்கிற கேடுகளை நீக்க வேண்டும் என்பது அவர்களின் எண்ணமாக இருந்தது. ஆனால், இந்த சமுதாயத்தை மிகச் சரியாக புரிந்து கொண்டவர்கள் சிலர் மட்டுமே. ஜோதிபா புலே தொடங்கி வைத்த புரட்சியை, சரியான பார்வையை பெரியார், புரட்சியாளர்

அம்பேத்கர் போன்றவர்கள்தான் எடுத்துச் சென்றார்கள். மற்றவர்கள் எல்லாம் இருந்ததை மெல்ல சீர்திருத்தி, கொஞ்சம் மாற்றி, அதற்கு புதிய வண்ணத்தைப் பூசிவிட்டு செல்வதாக இருந்த காலத்தில், அடிப்படையையே மாற்றியாக வேண்டும் என்று எண்ணிய தலைவர், அதற்காக தனது முழு அறிவை, உழைப்பை, எல்லாவற்றையும் பயன்படுத்திய தலைவர், தத்துவத் துறையில் ஆய்வு செய்யப் போனவர், ஆய்வு மாணவராக இருந்த காலத்தில் ஒரு ஆய்வு கட்டுரை எழுதுகிறார். இந்திய சாதியினுடைய தோற்றம், அதன் செயல்பாடு ஆகியவற்றை ஆய்வு செய்து மாந்தவியல் துறையில் அந்த அறிக்கையை தருகிறார். அவருடைய இருபத்தி ஐந்தாம் வயதில், அவர் ஆற்றிய ஆய்வுரை இன்றைக்கு வரைக்கும் எல்லா விதத்திலும் அதை நாம் புரட்டிப் பார்க்கிற பொழுது, இன்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்னால் ஆற்றப்பட்ட உரை. இந்த சமுதாயத்தின் கேடுகளாக, இந்த சமுதாயத்தின் நோயை தீர்ப்பதற்கான வழியாக அவர் சொன்னதைத் தான் நாம் மீள் ஆய்வு செய்து பார்க்க வேண்டும்.

அவர் மகத் மாநாட்டில் பேசினார். பல இடங்களில் பல செய்திகளை பதிவு செய்தார் என்றாலும், லாகூர் மாநாட்டில் அவர் ஆற்ற இருந்த உரை (ஆற்றிய உரை அல்ல) சாதி ஒழிப்பு சங்கத்தார் என்ற அமைப்பைச் சார்ந்தவர்கள் இவரை தலைமை தாங்கி, தலைமை உரையாற்ற அழைக்கிறார்கள். இவர் உரையை எழுதி அனுப்புகிறார். அதை படித்து பார்த்தவுடன் அதிர்ச்சி அடைந்து விடுகிறார்கள். இந்த சாதி ஒழிப்புக்காக அவர் சொல்லுகிற வழிமுறைகளைப் பார்த்து அதிர்ச்சி அடைய காரணம்... "இந்து சாஸ்திரங்களின் அதிகாரங்கள் தகர்க்கப்பட வேண்டும். அக மண முறை ஒழிக்கப்பட வேண்டும். இந்து மதம் தகர்ந்தாக வேண்டும். அர்ச்சகர் ஆகும் உரிமையை, உரிய பட்டயம் பெற்றால் அனைத்து சாதியினருக்கும் அளிக்க வேண்டும் என்பதையெல்லாம் வழிமுறையாக சொல்கிறார். இதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தவர்கள் கொஞ்சம் மாற்றிக் கொள்ள சொல்லி கேட்கிறார்கள். அதில் ஒரு கால் புள்ளியை மாற்றவும் நான் ஒப்புக் கொள்ள மாட்டேன். வேண்டாம் என்றால் திருப்பி அனுப்பி விடுங்கள்" என்று அம்பேத்கர் கேட்கிறார். மாநாட்டையே ஒத்தி வைத்து விடுகிறார்கள்.

நாம் புரட்சியாளர் அம்பேத்கரை, அவரின் கொள்கைகளை புரிந்து கொள்ள வேண்டுமானால், ஒவ்வொருவரும் படிக்க வேண்டியது அந்த நூல். அவர் ஆற்ற இருந்த உரையை நூலாக வெளியிட்டார். நூல் வெளிவந்த இரண்டாம் மாதத்தில், அம்பேத்கரின் அனுமதியோடு தமிழில் பெரியார் வெளியிட்டார். அந்த நூல் தாங்கியிருந்த சிந்தனையைதான் பெரியாரும் கொண்டிருந்தார். அரசியல் நிலைபாடுகளில் இருவருக்கும் சிறு சிறு மாற்றங்கள் இருந்திருக்கலாம். அம்பேத்கர் ஒன்றுபட்ட இந்தியாவை விரும்பினார். பெரியார் தனித் தமிழ்நாடு பேசினார். இந்தி ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்று அம்பேத்கர் விரும்பினார். பெரியார் இந்தி கூடாது என்று சொன்னார். அரசியல் நிலைகளில் அவரவர்களுக்கு இருந்த கருத்தின் அடிப்படையில் சொன்னார்கள். தாழ்த்தப்பட் டோரின் குடியிருப்பை பிற சாதியினர் வாழும் பகுதிகளில் நிறுவ வேண்டும் என்பது பெரியாரின் கருத்தாக இருந்தது. தாழ்த்தப்பட்டவர் களுக்கு தனிக் கிணறு வெட்ட காங்கிரஸ் நிதி அனுப்பியது. காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்த பெரியார் வந்த நாற்பத்தி எட்டாயிரம் ரூபாயை திருப்பி அனுப்பினார். பொதுக் கிணற்றில் நீர் எடுக்க போராட வேண்டுமே தவிர தனிக் கிணறு கூடாது என்பது பெரியார் கருத்து. இன்னொரு பக்கம் அம்பேத்கர் தனிக் குடியிருப்பு வேண்டும் என போராட்டம் நடத்தினார். இப்படி பார்த்தால் அவர்களின் கோரிக்கைகளில் வேறுபாடுகள் போல தெரியும். ஆனால் அடி நீரோட்டமாய் இருவர் கருத்தும் சாதி ஒழிப்பே சமூக விடுதலை என்பதாகத் தான் இருந்தது.

பல பேர் படிக்கிறார்கள், பட்டம் பெறுகிறார்கள், தனி மனித வளர்ச்சிக்கு பயன்படுத்திக் கொள்கிறார்கள். ஆனால் புரட்சியாளர் அம்பேத்கர் தான் பெற்ற அறிவை, கல்வியை, பதவியை அனைத்தையும் சமூக மேம்பாட்டிற்காக, சமூக மாற்றத்திற்காக பயன்படுத்திய தலைவர். 1935இல் மராட்டியத்தில், பம்பாய் மாகாணத்தில் சட்டமன்றத்திற்கு உறுப் பினராக நியமிக்கிறார்கள். நியமனம் பெற்று அவர் ஆற்றிய முதல் உரையிலேயே அங்கிருந்த நில உடமையாளர்களின் ஆதிக்கத்தை எதிர்த்து பேசுகிறார். ஆங்கில அரசு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு செய்த துரோகங்கள் பற்றி பேசுகிறார். அவர் ஒரு நியமன உறுப்பினராக இருந்தும், நியமித்தவர்களையே விமர்சித்து

பேசுகிறார். அவர் பதவி முக்கியம் எனக் கருதவில்லை. அவர் சமஸ்கிருதம் படித்தார், வேதங்களை படித்தார், புராணங்களை படித்தார், சாஸ்திரங்களை படித்தார். எதற்கு பயன்படுத்தினார்? இந்திய சமுதாயத்தில் சாதிய பிடியில் இருந்து மக்களை எப்படி காப்பாற்றுவது என்று அறிவதற்குப் படித்தார். மனுதர்மத்தைப் பற்றி அவர் செய்த ஆய்வு, யாருடனும் ஒப்பிட முடியாத அளவிற்குரிய ஆய்வாகும். மனுதர்ம சாஸ்திரத்திற்கு முன்னால் இருந்த காலத்தில் அனைவருக்கும் இருந்த உரிமைகளை எடுத்துக் காட்டினார். அவர் ஒவ்வொரு நாட்டின் சரித்திரங்களை படித்து, அடிமைத் தனத்தைவிட கொடுமையானது தீண்டாமைதான் என்பதை பல அடிமைத்தனத்தோடு ஒப்பிட்டு எழுதினார்.

அம்பேத்கர், வைஸ்ராய் கவுன்சில் உறுப்பினராக (இன்றைய மத்திய அமைச்சருக்கு இணையான பதவி) தேர்ந்தெடுக்கப்பட்டார். பதவி ஏற்பதற்கு முன்னால் நாக்பூரில் ஒரு மாநாட்டைக் கூட்டினார். கற்பி போராடு ஒன்று சேர் என்ற வாசகங்களை பேசியது அந்த மாநாட்டில்தான். பெண்கள் உரிமைக்காக தனியாக ஒரு மாநாடு, சமத்துவ தொண்டர் படை என்ற ஒரு மாநாடு, காந்தியோடு முரண்பட்டிருந்த அம்பேத்கர், இம்சைக்கு எதிரான சொல்தான் அகிம்சை. சாதியவாதிகளால் தாக்கப்பட்டால் திருப்பி தாக்கலாம் என்பதை தனது தொண்டர் களுக்கு சொன்னார்.

தாழ்த்தப்பட்ட மக்களின் விடிவெள்ளி என விளம்பரம் செய்து, அம்பேத்கரை தாழ்த்தப்பட்டவர்களின் தலைவராக சுருக்கிவிட்டார்கள். தாழ்த்தப்பட்ட மக்களின் விடிவெள்ளி என்றோ அரசியல் சட்டத்தை எழுதியவர் என்றோ சொல்வது அவருக்கு பெருமை அல்ல. அவர் சொன்னார்... இந்து சமுதாயத்திற்கு வேதங்கள் தேவைபட்டது தாழ்த்தப்பட்ட வியாசனை வைத்துக் கொண்டார்கள். அவர்களுக்கு இதிகாசம் தேவைபட்டது. தாழ்த்தப்பட்ட வால்மீகியை வைத்து எழுதிக் கொண்டார்கள். இவர்களுக்கு அரசியல் சட்டம் தேவைப்பட்டது. என்னைப் பயன்படுத்திக் கொண்டார்கள். அப்படித் தான் சொன்னார். இவர்கள் எங்கு போனாலும் தாழ்த்தப்பட்ட மக்களை பயன்படுத்தித்தான் தங்கள் உயர்வை நிறுவிக் கொண்டார்கள் என்று சொன்னார். நான் இந்த சட்டத்திற்கு

கட்டுப்பட்டவன். ஆனால் மதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னவர் அவர்தான். அவர் எழுதிய சட்டத்தைப் பற்றி. நான் வாடகை குதிரையாக பயன்படுத்தப்பட்டேன், என்னுடைய விருப்பத்திற்கு எதிராக பலவற்றை எழுதினேன் என்று சொன்னார். பேனாவை பிடித்தது மட்டும்தான் என் கை, அதை ஆட்டுவித்தவர்கள் பார்ப்பனர்கள் என்றும் சொன்னார். ஆந்திர பிரிவினை விவாதத்தின்போது பேசியவர்கள், ‘நீங்கள் தானே சட்டத்தை எழுதினீர்கள்’ என்று கேட்டனர். அவா சொன்னார்... ‘ஆம் நான் தான் எழுதினேன். அதை எரிக்கும் முதல் ஆளாக நான்தான் இருக்கப் போகிறேன்’ என்று. அரசியல் வரைவு குழுவிற்குள் நுழைந்தபோது, ‘என்னுடைய மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை தவிர, எனக்கு வேறு எந்த ஆசையும் இருக்கவில்லை’ என்று சொன்னார்.

‘பெட்டி திருட்டுப் போனாலும் சாவி என்னிடம் இருக்கிறது என்றானாம் நாயர்’ என்று மலையாள பழமொழி ஒன்று இருக்கிறது. அதுபோல அரசியல் சட்டத்திற்கு விளக்கம் சொல்பவர்கள் பார்ப்பனர்களாக இருக்கிறார்கள். ஆனால் எழுதப்பட்ட அரசியல் சட்டங்களில் பலவற்றை அம்பேத்கர் செய்தார். எட்டு மணி நேர வேலை என்பதை வலியுறுத்தி, பிரஞ்சு இந்தியாவில் பாண்டிச்சேரியில் மட்டும் ஒரு போராட்டம் நடந்திருக்கிறது. பிரிட்டிஷ் இந்தியாவில் யாரும் போராடவில்லை. அம்பேத்கர் தொழிலாளர் துறை அமைச்சராக இருந்தபோது, அதற்கான சட்டத்தை கொண்டு வந்தார். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மட்டும் செய்ததா அது? பெண் ஊழியர்களுக்கு மகப்பேறு காலத்தில் ஊதியத்துடன் கூடிய விடுமுறை வழங்க வேண்டும் என்பதை கொண்டு வந்தவர் புரட்சியாளர் அம்பேத்கர் தான்.

அரசியல் சட்டம் எழுதப்பட்டபோது, தாழ்த்தப் பட்ட மக்களுக்கு மட்டும் தான் அம்பேத்கர் இட ஒதுக்கீட்டை வைத்தார். பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடு வைக்க வில்லை என்று அவர் மீது ஒரு குற்றச்சாட்டு வைக்கிறார்கள். இதில் நாம் ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும். அப்போது தாழ்த்தப்பட்டவர்களுக்கு மட்டும்தான் பட்டியல் இருந்தது. பிற்படுத்தப்பட்டவர்களுக்கு பட்டியல் இல்லை. 1935ஆம் ஆண்டு சட்டத்திற்கு முன்னாலேயே இரண்டு பட்டியலை தயாரித்து

இருந்தார்கள். ஒன்று தீண்டாமைக்கு உட்பட்ட மக்கள், மற்றொன்று பொதுச் சமுதாயத்திலிருந்து விலகி, தனித்து வாழும் மக்கள். இந்த மக்களை பட்டியல் இன மக்கள் என தனியாக பிரிந்தார்கள். இந்த பட்டியலில் இருந்தவர்களுக்கான இடத்தை ஒதுக்கி அவரால் எழுத முடிந்தது. பட்டியலில் இல்லாத பிற்படுத்தப்பட்டவர்களுக்கு அரசியல் சட்டத்தில் 340 என்ற ஒரு பிரிவை எழுதினார். அரசு ஒரு ஆணையத்தை அமைத்து, சமுதாயத்திலும், கல்வியிலும் பின் தங்கியிருக்கும் மக்களின் பட்டியலை தயாரித்து, அவர்களின் மேம்பாட்டிற்கு செயல்பட வேண்டும் என்பதுதான் அந்த 340ஆவது பிரிவு. எழுதியதோடு நிற்கவில்லை. அரசியல் சட்டம் நடைமுறைக்கு வந்து ஒன்றரை ஆண்டுகளில் அவர் பதவியில் இருந்து விலகினார். பதவியில் இருந்து விலகுவதற்கு சில காரணங்களை கடிதத்தில் எழுதி யிருந்தார். பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு ஆணையம் அமைத்து, அவர்களின் மேம்பாட்டிற்கு செயல்பட வேண்டும் என்று சட்டம் இயற்றி ஒன்றரை ஆண்டுகள் ஆகியும், அதற்கான ஆணையம் கூட அமைக்கவில்லை என்பது, அவர் பதவி விலக எழுதிய காரணங்களில் ஒன்று. இப்படிப்பட்டவரைத்தான் தாழ்த்தப் பட்டவர்களின் தலைவர் என்று சொல்கிறார்கள்.

### **'பி வோ் ஆப் காந்தி'**

இட ஒதுக்கீடு என்பதைகூட, பதவி பெறும் நோக்கத்திற்காக அம்பேத்கர் சொல்லவில்லை. அனைத்து சமுதாய மக்களுக்கும், ஆட்சியிலும், அதிகாரங்களிலும் பங்கு இருக்க வேண்டும் என்பதுதான் அதற்கு அவர் கொண்ட பொருள். அவர் சொன்ன முறையும், அவருக்கு பின்னால் வந்தவர்கள் அதை எடுத்துக் கொண்ட முறையும் வெவ்வேறாக இருக்கிறது. நவீனத்துவத்தின் எதிரியாக இருந்தவர் காந்தி. அவருக்கு எதிர்ப்பைக் காட்டுவதற்கான அடையாளமாக, மிடுக்கான உடையோடும், பெருமித தோற்றத்தோடும் அம்பேத்கர் இருந்தார். அது அவர் விரும்பி ஏற்றுக் கொண்டதல்ல. ஆனால், அவருக்கு பின்னால் வந்த தலைவர்கள் அவரை போல் உடைகளை, காலணிகளை அணிவதுதான் அம்பேத்கரியம் என்று கருதிக் கொண்டார்கள். அவர் ஆட்சி அதிகாரத்தை, அரசியல் அதிகாரத்தை சமூக விடுதலைக்கு ஒரு வழியாக மட்டும் வைத்திருந்தார். இப்போது

இவர்கள் அதை முடிந்த முடிவாக ஒரே இலட்சியமாக எடுத்துக் கொண்டுவிட்டார்கள். சமுதாயத்தின் மீது அவர் வைத்த பார்வை என்னவாக இருந்தது என்பதில் இருந்துதான் அம்பேத்கரை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இந்திய நாட்டின் விடுதலை பற்றி பேசுகிறபோது, இந்திய விடுதலைக்கு எதிரானவர்கள் என்ற குற்றச்சாட்டு பெரியார் மீதும், அம்பேத்கர் மீதும் உண்டு.

காங்கிரசை எப்போதும் எதிர்த்து வந்த அம்பேத்கர், காந்தியும், காங்கிரசும் தீண்டதகாதவர்களுக்கு செய்தது என்ன? என்று ஒரு புத்தகமாக எழுதி, இந்த மக்களுக்கு காந்தியும், காங்கிரசும் செய்த துரோகங்களை பட்டியலிடுகிறார். பல வீடுகளின் முன்னால் நாய்கள் இருக்கிறது எச்சரிக்கை என்ற பொருளில் "பிவேர் ஆப் டாக்ஸ்" என்று எழுதியிருப்பதைப் போல், அந்த புத்தகத்தின் இறுதி அத்தியாயத்திற்கு முந்தைய அத்தியாயத்தில், "பிவேர் ஆப் காந்தி" என்ற தலைப்பை அம்பேத்கர் எழுதியுள்ளார். தாழ்த்தப்பட்டவர் முன்னேற்றத் திற்காக பல முயற்சிகள் எடுத்ததில் ஒன்றாகத்தான், 1930 ஆம் ஆண்டு வட்டமேசை மாநாட்டிற்கு சென்று பல செய்திகளை எடுத்து வைத்தார். காங்கிரஸ் அப்போது கலந்து கொள்ள வில்லை. 1931 ஆம் ஆண்டு தான் காந்தி - இர்வின் ஒப்பந்தத்தின்படி வட்டமேசை மாநாட்டில் காந்தி கலந்து கொள்கிறார். (உப்பு சத்தியாகிரக போராட்டத்தில் கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்யக் கோரி, இனி போராட்டம் நடத்த மாட்டோம் என்றும், வட்ட மேசை மாநாட்டில் கலந்து கொள்கிறேன் என்றும் போடப்பட்டதுதான் "காந்தி-இர்வின் ஒப்பந்தம்")

1930 ஆம் ஆண்டு வட்ட மேசை மாநாட்டிற்கு செல்வதற்கு முன்னால் காந்தியை சந்தித்து பல விவாதங்களை செய்து, நீங்கள் ஏன் எப்போதும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு துரோகமே செய்கிறீர்கள் என்று கேட்டு விட்டுத்தான் அம்பேத்கர் மாநாட்டிற்குப் போனார். அந்த மாநாட்டில் அம்பேத்கர் வைத்த கோரிக்கையை ஏற்றுக் கொண்ட பிரிட்டிஷ் பிரதமர், தாழ்த்தப்பட்டவர்களுக்கு இரட்டை வாக்குரிமை தனித்தொகுதி உண்டு என அறிவித்தார். அப்படி கூடாது என்று போராடினார் காந்தி. இசுலாமியர்களுக்கும், சீக்கியர்களுக்கும் தனித் தொகுதியை ஏற்றுக்கொண்ட காந்தி, தாழ்த்தப்பட்டவர்களுக்கு

வழங்குவது, இந்துக்களை பிரிக்கும் சூழ்ச்சி என்றார். அம்பேத்கர் கேட்டார்... "இது வந்து தானா இந்துக்களை பிரிக்கப் போகிறது? நீங்கள் என்ன இணைத்தா வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? எப்போதும் எங்களை அரவணைத்துக் கொண்டா இருக்கிறீர்கள்? எப்போதும் பிரிந்திருக்கிற நாங்கள், இப்போதும் பிரிந்திருந்து நாங்கள் பெறப் போகும் மேம்பாட்டை ஏன் தடுக்கிறீர்கள்?" என்று.

சாகும் வரை உண்ணாவிரதம் என்று அறிவித்த காந்தியை பார்த்து அம்பேத்கர் கேட்டார்..... "நீங்கள் எப்போதாவது உங்களின் உச்சபட்ச கோரிக்கையான இந்திய நாட்டின் விடுதலைக்காக உண்ணாவிரதம் இருந்திருக்கிறீர்களா? எங்கள் உரிமையை பறிப்பதற்காக உண்ணாவிரதம் இருக்கிறீர்களே" என்று. "ஏழு கோடி தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைகளை விட, ஒரு காந்தியின் உயிர் பெரிதல்ல, உறுதியாக நில்லுங்கள்" என்று. அப்போது வெளிநாட்டில் இருந்த பெரியார் அம்பேத்கருக்கு தந்தி கொடுத்தார். ஆனால், தாழ்த்தப்பட்ட மக்கள் மீது கண்மூடித்தனமான தாக்குதல்கள் நடத்தப்பட்டதால் உரிமைகளை விட்டுக் கொடுக்க நேர்ந்தது. தொடர்ச்சியாக காந்தியின் சூதான போக்கினை எதிர்த்து நின்ற தலைவர்கள் பெரியாரும் அம்பேத்கரும்.

இந்த சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்டுள்ள மக்களின் உரிமையைப் பற்றி, அவர்களுக்கான மேம்பாட்டு திட்டங்களை ஆய்வு செய்வதற்காக வந்ததுதான் சைமன் கமிஷன். அதை வரவேற்றவர்கள் இந்தியா முழுவதும் இரண்டே தலைவர்கள் பெரியாரும் அம்பேத்கரும்தான். எல்லோரும் எதிர்த்தார்கள். பெரியார் ஆதரித்து வந்த நீதிக் கட்சியும் எதிர்த்தது. அப்போது பெரியார் எழுதினார்... "சைமன் கமிஷனில் இந்தியர்கள் யாரையும் நியமிக்கவில்லை என்ற காரணத்தைச் சொன்னார்கள். மிண்டோ மார்லி, மாண்டேகு சேம்ஸ்போர்டு வந்த போதெல்லாம் கேட்காமல், இப்போது மட்டும் ஏன் கேட்கிறாய்? ரவுலட் சட்டத்தை ரவுலட் மட்டுமா எழுதினான்? குமாரசாமி சாஸ்திரியும் சேர்ந்து தானே எழுதினான். அதனால் என்ன பலன் கிடைத்தது? அவன் வீட்ல நான்கு பேருக்கு வேலை கிடைத்தது. நல்லது வந்தா மட்டும் நீ ஏற்றுக் கொள்கிறாய். கெட்டது வந்தா வாயை மூடிக்

கொள்கிறாயே. நல்லவேளையாக இந்தியர்கள் யாரையும் நியமிக்க வில்லை. நியமித்திருந்தால் பார்ப்பானைதான் நியமித்திருப்பான். அவன் எங்களுக்கு எதிராகத்தான் இருந்திருப்பான். எனவே இதை நான் வரவேற்கிறேன்'' என்று எழுதினார்.

இரண்டாம் உலகப் போரில், இந்தியப் படையை ஆங்கில அரசு போரில் ஈடுபடுத்தியது. இதனால் இந்தியர்களுக்கு என்ன லாபம் என்று கண்டித்து காந்தி அறிக்கை விட்டார். எப்போதும் காந்தியை எதிர்க்கும் அம்பேத்கர் அப்போது வரவேற்றார். காந்தியார் கேட்ட கேள்வியில் நியாயம் இருக்கிறது வரவேற்கிறேன், அதே சமயத்தில் காந்தியாரிடம் எனக்கு ஒரு கேள்வி இருக்கிறது. இந்திய விடுதலைப் போரில் தாழ்த்தப்பட்டவர்களை ஈடுபடுத்துகிறீர்களே! அதனால் தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்ன லாபம் இருக்கிறது என்று கேட்டார். அதைத்தான் இன்றும் சொல்கிறோம். தமிழ் தேசியம் பேசுகிற பல பேர் சிக்கல் இல்லாத பிரச்சினை என்பதற்காக பேசிக் கொண்டிருக்கிறார்கள். சாதி இல்லை என்று பேசினால்தான் சிக்கல் வரும். தமிழ் தேசியம் என்று சொன்னால் எந்த சிக்கல்களும் இல்லை. இந்திய நாட்டு விடுதலையின்போது அம்பேத்கர் கேட்டார். தமிழ்நாட்டிற்கு விடுதலை விரும்புகிற நாம் கேட்கிறோம், சாதி ஒழிப்பு இல்லாத தமிழ்நாட்டு விடுதலையில் நமக்கென்ன இருக்கிறது? சாதி ஒழிப்பை இலக்காகக் கொண்ட, அதை நோக்கமாகக் கொண்ட, அதை போராட்டத்தோடு இணைத்துக் கொண்ட தமிழ்நாட்டு விடுதலைக்கு நாம் போராடுவோம்.

பெரியார் கேட்ட தனித் தமிழ்நாடு, சாதி ஒழிந்த, பாலியல், பொருளியல் பேதமொழிந்த - பொது உரிமை கொண்ட பொதுவுடைமை சமத்துவ சமுதாயத்தைப் படைக்க வேண்டும் - தடையாகவே விளங்கும் பார்ப்பன, பனியா கும்பலிடம் இருந்து பிரிந்து, வடவர் சுரண்டலற்ற நாட்டை உருவாக்க வேண்டும் என்பதே பெரியார் கேட்ட தனிநாடு. சாதி ஒழிப்பே உண்மை விடுதலை என்பதை ஏற்றுக் கொள்வோம் என்று கூறி விடைபெறுகிறேன்.

**(14.4.2011 - சேலம் அம்பேத்கர் பிறந்த நாள் விழாவில் ஆற்றிய உரை)**

# பெரியார் பாதையில் காமராசர்...

*திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, ஜூலை 15ஆம் நாள் சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் நடத்திய காமராசர் பிறந்த நாள் விழாவில் 'பெரியாரும் காமராசரும்' என்ற தலைப்பில் ஆற்றிய உரை:*

"காங்கிரஸ் கட்சியிலிருந்து வெளியேறி காங்கிரசை வீழ்த்தியே தீருவேன் என அறிவித்த பெரியார், அதே காங்கிரஸ் கட்சியில் இருந்த காமராசரை அரவணைத்தார் என்றால் அதற்கு என்ன காரணம்? பெரியாரின் அடியொற்றி செயல்பட்டார் காமராசர் என்பதுதான். தேசிய இயக்கத்தில் இருந்தாலும் தமிழர்களின் உரிமைக்காகப் பாடுபட்டார். மறுக்கப்பட்ட தமிழர்களின் உரிமைகளுக்கான தடைகளை தகர்ப்பதில் பெரியாருக்கு இருந்த அதே உணர்வு காமராசருக்கும் இருந்திருக்கிறது. பெரியாருக்கு இருந்த கருத்து வீரியம் காமராசருக்கும் இருந்திருக்கிறது.

காமராசரது வாழ்க்கை வரலாற்றைப் படிக்கும்போது அவரது மாணவப் பருவத்திலேயே பெரியாரின் கொள்கைத் தாக்கம் இருந்திருப்பதைப் பார்க்க முடிகிறது. பள்ளிப் பருவத்திலேயே 'மந்திர-தந்திரங்களை' காமராசர் எதிர்த்திருக்கிறார். பீதாம்பர அய்யர் என்பவர் 'மந்திரங்களை' செய்ததை நேரில் பார்த்து அவர் எப்படி எல்லாம் அதை செய்கிறார் என்பதை சக மாணவர்களிடம் செய்து காட்டி விளக்கியிருக்கிறார். 21 வயது இளைஞராக இருக்கும்போதே விருதுநகரில் பெரியாரை அழைத்து மாநாடு நடத்தியிருக்கிறார். பள்ளியில் ஒழுங்காகப்

படிப்பது இல்லை என்று கேரளாவில் உள்ள அவரது தாய்மாமன் வீட்டுக்கு காமராசரை அவரது பெற்றோர்கள் அனுப்பினார்கள். அங்கே போயும் வைக்கத்தில் பெரியார் போராட்டம் நடத்தியபோது அந்தப் போராட்டத்தில் பங்கெடுத்திருக்கிறார்.

ஒரு தேசியவாதியாக அவர் போராடவில்லை. தமிழர் உணர்வு என்ற அடிப்படையிலேயே போராடியிருக்கிறார். மொழிவாரிப் பிரிவினைகளின்போது 1953ஆம் ஆண்டிலேயே ஆந்திரா தனி மாநிலமாகப் பிரிந்துவிட்டது. கேரளா, தமிழ்நாடு, கர்நாடகம் என்ற மாநிலங்களும் மொழி வழியாகப் பிரியாமல் தடுப்பதற்காக மூன்று மாநிலங்களையும் இணைத்து 'தட்சிணப் பிரதேசம்'

## கை ரேகையைப் பாருங்கள்

காமராசருடைய அனுபவம் சார்ந்த நிர்வாகத் திறமைக்கு ஒன்றைக் குறிப்பிட வேண்டும். அப்போதெல்லாம் மருத்துவக் கல்லூரி மாணவர்கள் சேர்க்கையில் முதலமைச்சர்களுக்கு "தேர்வு உரிமைகள்" (கோட்டா) உண்டு. அந்த உரிமையின் கீழ் இடம் கேட்டு முதலமைச்சருக்கு ஏராளமான விண்ணப்பங்கள் வரும். இப்போதெல்லாம் அத்தகைய இடங்களுக்கு உறவினர்கள், கட்சிக்காரர்களிடமிருந்து சிபாரிசுகள் வரும். அல்லது பணத்துக்கு அந்த இடங்களை விற்பார்கள். அப்போது இந்த சீர்கேடுகள் கிடையாது. மருத்துவத் துறை செயலாளர், 'ஏராளமாக இடம் கேட்டு விண்ணப்பங்கள் வந்திருக்கிறதே; இதில் யாரைத் தேர்வு செய்வது' என்று காமராசரிடம் கேட்டார். சிறிது நேரத்தில் காமராசர்இதற்கு தீர்வு கூறினார். "விண்ணப்பத்தில் பெற்றோரின் பெயர் என்று இருக்குமிடத்தில் கையெழுத்துப் போடாமல் கைரேகைப் பதித்திருப்பவர்களின் விண்ணப்பங்களை தேர்வு செய்து அனுப்புங்கள்" என்று கூறினார். (கைதட்டல்) அதுவரைப் பள்ளிக்கூடப் பக்கமே திரும்பாத, படிக்காத பெற்றோர்களின் வீட்டுப் பிள்ளைகள் மருத்துவம் படிக்கட்டும் என்று காமராசர் நினைத்தார்.

**கொளத்தூர் மணி உரையிலிருந்து**

ஒன்றை உருவாக்க முயற்சிகள் நடந்தபோது பெரியார் அதைக் கடுமையாக எதிர்த்தார். பெரியார் ஒரு கன்னடர் என்றும் கன்னடர், தெலுங்கர் உரிமைகளுக்காக தமிழர் நலனை அடகு வைத்தவர் என்றும், இப்போது சிலர் குற்றம்சாட்டுகிறார்கள். பெரியாருக்கு அத்தகைய உணர்வு இருந்திருக்குமானால், அல்லது திராவிடர் நாடே தேவை என்று கருதியிருந்தால் அவர் தட்சிணப் பிரதேச திட்டத்தை ஆதரித்திருப்பார். தமிழர் நலன் என்ற உணர்வின் காரணமாகவே அத்திட்டத்தை பெரியார் எதிர்த்தார். தட்சிணப் பிரதேசம் என்ற ஒன்று அமைந்துவிட்டால், தமிழர்களின் வேலை வாய்ப்புகளை, மலையாளிகளும் கன்னடர்களும் பறித்துக் கொண்டுபோய் விடுவார்கள்; அவர்கள் எஜமானர்களாகி விடுவார்கள்; தமிழன் எடுபிடியாகத்தான் இருப்பான் என்றார் பெரியார். இது குறித்து முடிவெடுக்க பெங்களூரில் முதல்வர்கள் மாநாட்டைக் கூட்டினார் நேரு. தட்சிணப் பிரதேசம் உருவானால் ‘இரத்தக் களரிதான்’ ஏற்படும் என்று பெரியார் தந்தி மூலம் எச்சரித்தார். பெரியார் எந்த கருத்தைக் கூறி எச்சரித்தாரோ அப்படியே அதே கருத்தை நேருவிடம் கூறினார் காமராசர். காமராசர் ஒரு தேசிய கட்சியில் இருந்தாலும், அவர் மொழி வழி மாநிலங்கள் பிரிவது தேசியத்துக்கு எதிரானது என்று கருதவில்லை. இரு தலைவர்களுமே, தமிழ்நாடு தமிழர் நலன் என்ற கருத்தில் பிரிக்க முடியாதபடி ஒன்றுபட்டு நின்றார்கள்.

இங்கே குலக்கல்வித் திட்டம் பற்றி பேசினார்கள். ராஜாஜி அத்திட்டத்தைக் கொண்டுவந்தபோது காமராசர் அது காங்கிரஸ் கட்சியின் முதல்வர் கொண்டு வருகிற திட்டம் என்பதற்காக ஆதரிக்கத் தயாராக இல்லை. அதை எதிர்த்தார். அப்போது அத்திட்டத்துக்கு புதிய கல்வித் திட்டம் என்று பெயர் சூட்டப்பட்டிருந்தது. பள்ளிக் குழந்தைகள் அரை நேரம் அவரவர் பெற்றோரின் குலத் தொழிலை செய்ய வேண்டும் என்பது அத்திட்டம்.

இப்போது பா.ஜ.க. ஆட்சி 2015ஆம் ஆண்டு குழந்தைத் தொழிலாளர்கள் உரிமைச் சட்டத்தில் ஒரு திருத்தம் கொண்டு வந்தது. 14 வயதுக்குட்பட்ட குழந்தைகள் பள்ளி நேரம் முடிந்த பிறகோ அல்லது விடுமுறை நாட்களிலோ அவர்களது

பாரம்பர்யத் தொழிலை செய்யலாம் என்கிறது இந்த புதிய கல்விக் கொள்கை. ராஜாஜி கொண்டு வந்தது குலக் கல்வி. இப்போது குலத் தொழிலை பலரும் கைவிட்டு நகர்ப்புறத்தில் குடியேறி வேறு தொழிலுக்கு மாறி விட்டார்கள். பல குடும்பங்கள் 'அவுட் சோர்சிங்' முறையில் வேலைகளை எடுத்து தொழில் செய்து வருகின்றன. பள்ளிக் குழந்தைகள் இந்தப் பாரம்பர்யத் தொழிலை செய்வதில் பெற்றோர்களுக்கு உதவலாம் என்று குழந்தைகளை உடல் உழைப்பில் பயன்படுத்தக் கூடாது என்றிருந்த சட்டத்தைத் திருத்தி மாற்றியமைக்கிறது, பா.ஜ.க.வின் இந்த புதிய கல்விக் கொள்கை. அன்று 'குலக்கல்வி'; இன்று 'பாரம்பர்யக் கல்வி'யாக வருகிறது.

அன்று ராஜாஜி கொண்டு வந்த 'புதிய கல்வி' கொள்கைக்கு 'குலக்கல்வித் திட்டம்' என்று பெரியார் பெயர் சூட்டினார். அந்தப் பெயர்தான் நிலைத்தது. குலக்கல்வித் திட்ட எதிர்ப்பு மாநாட்டை சென்னையில் பெரியார் கூட்டினார். நீடாமங்கலம் அ.ஆறுமுகம் என்ற பெரியார் தொண்டர் தலைமையில் குலக்கல்வித் திட்ட எதிர்ப்புப் பிரச்சாரப் படை ஒன்று நீடாமங்கலத்திலிருந்து புறப்பட்டு, நடைபயணமாகவே சென்னை வந்தது. பெரியார், "பெட்ரோலும் தீப்பந்தமும் தயாராக இருக்கட்டும். ஒவ்வொருவரும் கத்தி வைத்துக் கொள்ளுங்கள். நான் நாள் குறித்து அறிவிப்பேன். அக்கிரகாரம் எரிய வேண்டும்" என்று வெளிப்படையாகவே அறிக்கை விடுத்தார். எச்சரிக்கை செய்தாரே தவிர, நாள் குறிக்கவில்லை. குலக்கல்வி எதிர்ப்புப் படை சென்னை வந்தடைந்தது. அப்போது ராஜாஜி பதவி விலகி, காமராசர் முதல்வராகிவிட்டார். குலக்கல்வி எதிர்ப்புப் படையினர், காமராசரை கோட்டையில் சென்று சந்தித்தனர். 'நல்ல சேதி வரும் போய் வாருங்கள்' என்றார் காமராசர். நான்கே நாள்களில் குலக்கல்வித் திட்டத்தை ஒழித்தார் காமராசர். பெரியார், காமராசரின் இந்தச் செயலை மாய்ந்து மாய்ந்து பாராட்டி மகிழ்ந்தார்.

5 சதவீதம், 8 சதவீதம் என்றிருந்த தமிழர்களின் கல்விக் கற்றலை 31 சதவீதமாக உயர்த்திய பெருமை காமராசரையே சாரும் என்று எழுதினார் பெரியார்.

'தகுதி திறமை' கெட்டுப் போகிறது என்று இடஒதுக்கீட்டை எதிர்த்தப் பார்ப்பனர்களுக்கு சரியான பதிலடி தந்தார் காமராசர். இங்கே பேசியவர்கள் அதை எல்லாம் கூறினார்கள். 'தகுதி திறமை மோசடி' என்று கருத்துகளை எல்லாம் தொகுத்து பெரியார் ஒரு நூலாகவே வெளியிட்டார்.

அது மட்டுமல்ல; அய்.ஏ.எஸ். போன்ற அகில இந்திய தேர்வுகளை தாய்மொழியில் எழுத அனுமதிக்க வேண்டும் என்று குரல் கொடுத்தவர் காமராசர். இப்போது அனைத்து இந்திய தேர்வுகளை இந்தி அல்லது ஆங்கிலத்தில்தான் எழுத முடியும். 22 சதவீதம் ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற வேண்டும் என்ற முறை அய்.ஏ.எஸ்.சுக்கு வந்தபோது வடநாட்டில் அதைக் கடுமையாக எதிர்த்தார்கள். நாங்கள் ஏன் ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற வேண்டும் என்று கேட்டார்கள். ஆனால் நமக்கு தாய்மொழியில் எழுத உரிமையில்லாமல் சாதாரண மத்திய அரசு பணிகளுக்குக் கூட 100 சதவீதம் ஆங்கிலத்தில் எழுத வேண்டியவர்களாக இருக்கிறோம்.

அகில இந்திய கட்சியில் இருந்தாலும் டெல்லிக்காரன் சொல்வதை எல்லாம் அப்படியே அடிபணிந்து நான் கேட்பவன் அல்ல என்று ராஜாஜிக்கு பதில் சொன்னவர் காமராசர். ஒரு வரலாற்றுத் தகவலைக் குறிப்பிட வேண்டும். பாகிஸ்தான் பிரிவினையை ஆதரித்த ராஜாஜி, 1942இல் காந்தி அறிவித்த 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தை ஆதரிக்கவில்லை. அப்போது காங்கிரஸ் கட்சியிலிருந்தே விலகிக் கொண்டார். அதற்குப் பிறகு காங்கிரஸ் அதிகாரத்துக்கு வரப்போகிறது என்பதை புரிந்து கொண்டு மீண்டும் காங்கிரசில் சேர முனைகிறார். டெல்லியில் அகில இந்திய காங்கிரஸ் தலைவராக இருந்த அபுல்கலாம் ஆசாத்தை நேரடியாகவே போய் சந்தித்து, தனது செல்வாக்கைப் பயன்படுத்தி தமிழ் மாகாண காங்கிரஸ் கமிட்டியில் உறுப்பினராகி விடுகிறார். காமராசருக்கு தெரியாமலேயே இவ்வளவும் நடக்கிறது. திருச்செங்கோட்டில் மாவட்ட காங்கிரஸ், ராஜாஜி காங்கிரசில் இணைவதை வரவேற்று தீர்மானம் போட்டது. திருப்பரங்குன்றத்தில் காமராசர் தலைமையில் மாநில காங்கிரஸ் கூடி, ராஜாஜி மாகாண காங்கிரஸ் உறுப்பினரானதை இரத்து செய்தது. இறுதியில்

அகில இந்திய காங்கிரஸ் தலைமை தனது முடிவையே மறு உறுதி செய்தது. அப்போதுதான் அண்ணா எழுதினார், "கோடு உயர்ந்தது; குன்றம் தாழ்ந்தது; கலங்காதீர் காமராசரே, கருஞ்சட்டைப் படை உமது கண்ணீரைத் துடைக்கும்" என்று. இது வரலாறு.

காமராசர் முதலமைச்சராக வந்தவுடன், அவர் உருவாக்கிய அமைச்சரவையில் ஒரு பார்ப்பனர்கூட இடம் பெறவில்லை. பின்னாளில்தான் ஆர்.வெங்கட்ராமன் அமைச்சராக்கப்பட்டார். முதலமைச்சராக இருப்பவர்கள்தான் உள்துறையை தங்களிடம் வைத்திருப்பார்கள். ஆனால் காமராசர் உள்துறையை கக்கன் என்ற தாழ்த்தப்பட்ட சமுதாயத்திலிருந்து வந்த தலைவரிடம் ஒப்படைத்தார். அறநிலையத் துறைக்கு பி.ஆர். பரமேசுவரன் என்ற தாழ்த்தப்பட்டவரை நியமித்தார். அதற்கு முன் இருந்த ராஜாஜி அமைச்சரவையில் 5 பார்ப்பனர்கள் இடம் பெற்றிருந்தார்கள். 205 சட்டமன்ற உறுப்பினர்களில் 8 பார்ப்பனர்களுக்கு மட்டுமே போட்டியிட வாய்ப்பளித்தார். இதைப் பாராட்டிய பெரியார், "நானாக இருந்தால்கூட 20 பார்ப்பனருக்கு வாய்ப்பளித்திருப்பேன். காமராசர் மிஞ்சி விட்டார்" என்று எழுதினார். உயர் பதவிகளில் தமிழர்களே நிரம்பி வழிந்தனர். நெ.து. சுந்தரவடிவேலு, கல்வித் துறை இயக்குனராக்கப்பட்டார். அவரைவிட சிறந்த கல்வி பெற்று அமெரிக்காவிலே ஆராய்ச்சியாளராக இருந்தவரை அவர் காமராசரின் ஜாதிக்காரராக இருப்பதாலும் அவரை கல்வி அதிகாரியாக்கலாம் என்று கூறப்பட்ட போது காமராசர் அதை ஏற்க மறுத்து நெ.து.சு. அவர்களையே கல்வித் துறைக்கு அதிகாரியாக நியமித்தார்.

ஒரு சம்பவத்தை குறிப்பிட வேண்டும்:

ஒரு அதிகாரிக்கு நியாயமாக கிடைக்க வேண்டிய பதவி உயர்வு கிடைக்காத நிலையில் அவருக்காக வ.உ.சிதம்பரனாரின் மகன், வ.உ.சுப்ரமணியம் காமராசரிடம் பரிந்துரைக்கு வந்தார். அதிகாரியின் பெயர் கிறிஸ்துவத்தைச் சார்ந்ததாக இருந்ததால் அதன் காரணமாக அவரது பதவி உயர்வு தடுக்கப்பட்டிருக்கலாம் என்று கருதிய வ.உ.சுப்பிரமணியம், அவர் கிறிஸ்தவராக

*இருந்தாலும் நாடார் சமூகம் என்று கூறியபோது காமராசருக்கு கோபம் வந்துவிட்டது. 'ஜாதிக்காரன்னு எல்லாம் சொல்லிக் கிட்டு வராதே; போ' என்று கூறி திருப்பி அனுப்பிவிட்டார். ஜாதியைக் கூறியதாலேயே அந்த அதிகாரிக்கு நியாயமாக கிடைக்க வேண்டிய பதவி உயர்வு 6 மாதம் தள்ளி போடப்பட்டது காமராசர் ஆட்சியில்!*

*ராஜாஜி இறந்தபோது பெரியார் அவரது இறுதி நிகழ்வுக்குச் சென்றதை எல்லோரும் குறிப்பிடுவார்கள். அண்ணா சிகிச்சைக்காக அமெரிக்கா சென்றபோது அங்கே அதிபராக இருந்த நிக்சனை, முதலமைச்சர் என்ற முறையில் சந்திக்க விரும்பினார். ஆனால், நிக்சன் சந்திக்க மறுத்தார். பிறகு காமராசர் அகில இந்திய காங்கிரஸ் தலைவராக இருந்தபோது இந்தியா வந்த நிக்சன், காமராசரை சந்திக்க விரும்பினார். காமராசர், "எங்கள் மாநில முதல்வரையே சந்திக்க மறுத்த உங்களை நான் சந்திக்கத் தயாரில்லை" என்று மறுத்து விட்டார். (கைதட்டல்)*

*காமராசர் நடத்திய ஆட்சி பெரியார் கொள்கைகளின் ஆட்சியாகவே இருந்தது. அதன் காரணமாகத் தான் ராஜாஜியே காமராசர் ஆட்சியை 'தெய்வத்தை ஒதுக்கிவிட்ட ஆட்சி' என்ற தலைப்பிட்டு 'கல்கி' பத்திரிகையில் 8.12.1961இல் தலையங்கம் எழுதினார். காமராசர் மீது பார்ப்பனர்களுக்கு அவர் பெரியார் வழியில் செல்கிறார் என்பதால் அவ்வளவு கோபம்!*

*அதற்குப் பிறகு 20 நாள் கழித்து ராஜபாளையத்தில் டிசம்பர் 31இல் காமராசர் இவ்வாறு பேசினார்:*

*"ஏழைகளை வாழ வைப்பது சிலருக்குப் பிடிக்கவில்லை. அவர்கள் ஒரு வேளையாவது நல்லபடி சாப்பிட வகை செய்ய வேண்டாமா? படிக்க வழி செய்ய வேண்டாமா? இதைச் செய்தால் காங்கிரஸ் ஒழியணும் என்கிறார்கள். மரம் வளர்த்தவன் தண்ணீர் விடுவானாம்! இது தர்மமாம்; ஏழைகளை ஆண்டவன் காப்பாற்றுவான் என்கிறார்கள். மரம் வைத்தவனும் தண்ணீர் ஊற்றவில்லை; மற்றவர்களும் ஊற்றவில்லை. அதைப் பார்த்த பிறகுதான் ஏழைகளுக்கு சர்க்கார்தான் வசதி செய்ய வேண்டும் என்கிறேன்" என்று பேசினார். ராஜாஜிக்கு காமராசர் மீது ஆத்திரம் வந்தது ஏன் என்பது இப்போது புரியும்.*

சென்னை திருவான்மியூரில் சலவைத் தொழிலாளர் மாநாடு ஒன்று நடந்தது; மாநாட்டில் பேசிய ராஜாஜி, "நீங்கள் உங்களது தொழிலை மேலும் சிறப்பாக செய்வது எப்படி என்பதில் கவனம் செலுத்தி முன்னேற வேண்டும்; எல்லோரும் படிக்க வந்து விட்டால் பிறகு உங்கள் தொழிலை யார் செய்வது?" என்று கேட்டார். குழந்தைகளுக்கு எல்லாம் காமராசர் என்று பெயர் சூட்டினார். 'பெயர் சூட்டுவதற்கு பெரியார் ஒரு ரூபாய் கேட்பார். இன்னும் ஒரு ரூபாய் கூடுதலாகக் கொடுத்தால் நல்ல பெயர் சூட்டுவேன்' என்று கூறி, அந்தக் குழந்தைக்கு 'காமராசர்' என்று பெயர் சூட்டுவார்.

1967 தேர்தலில் காமராசர் தோல்வி அடைந்து விட்டார். தி.மு.க. ஆட்சிக்கு வந்து விட்டது. பெரியார் தி.மு.க.வை ஆதரிக்கத் தொடங்கிவிட்டார். அதற்குப் பிறகு 11.1.1968இல் 'விடுதலை'யில் வெளியிட்ட அறிக்கையில் "கல்வி சம்பந்தப்பட்ட வரையில் எந்த நிகழ்ச்சி ஆரம்பித்தாலும் கடவுள் வாழ்த்துச் சொல்வதை நிறுத்திவிட்டுக் காமராசர் வாழ்த்துக் கூற வேண்டும்" என்று எழுதினார். இங்கேகூட அந்த வாசகத்தை காமராசர் படத்துக்குக் கீழே நமது தோழர்கள் பதிவு செய்திருக்கிறார்கள்.

1969ல் நாகர்கோயில் நாடாளுமன்ற இடைத் தேர்தலில் காமராசர் போட்டியிட்டபோது பெரியார் காமராசரையே ஆதரிக்க வேண்டும் என்று எழுதினார். தி.மு.க. தனது ஆதரவு வேட்பாளரை காமராசருக்கு எதிராக நிறுத்தியதை பெரியார் குறை கூறினார். தி.மு.க.வை ஆதரிக்கிறோம் என்பதற்காக தி.மு.க. கூட்டணி வேட்பாளர்களை எல்லாம் ஆதரிக்க வேண்டும் என்று பெரியார் கருதவில்லை. காமராசர் தொண்டின் மீது பெரியாருக்கு அவ்வளவு பற்றும் ஈடுபாடும் இருந்தது.

தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு அண்ணா உடல்நலமின்றி அமெரிக்காவுக்கு சிகிச்சைக்கு சென்றபோது காமராசர் அண்ணாவிடம் கூறினார், "நீங்கள் நலம் பெற்று திரும்பி வரும்வரை எங்கள் கட்சி உங்கள் ஆட்சிக்கு எந்த இடையூறும் செய்யாது" என்று கூறினார். "தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகுகூட 6 மாதங்கள் வரை ஆட்சியின் மீது எந்த விமர்சனமும் வேண்டாம் அவகாசம் தருவோம்" என்று காமராசர் கூறினார். அத்தகைய உயரிய பண்பாடு அன்று அரசியலில் இருந்தது.

## ‘தமிழில் தலைமை உரையாற்றிய முதல் தலைவர்’

காமராசர், அகில இந்திய கட்சியான காங்கிரசில் இருந்தாலும் தமிழ் உணர்வை விட்டுத் தராத தலைவர். மொரார்ஜி பிரதமராக இருந்தபோது, கேரள முதல்வர் ஈ.கே.நயினாருக்கு இந்தியில் ஒரு கடிதம் எழுதினார். அதற்கு ஈ.கே. நயினார், மலையாளத்தில் பதில் எழுதினார். ‘மொரார்ஜி என்ன இது? மலையாளத்தில் எழுதினால் எப்படி புரியும்’ என்றார். ‘நீங்கள் இந்தியில் எழுதியது எனக்குப் புரியவில்லையே’ என்றார் ஈ.கே.நயினார்.

காமராசர் காங்கிரஸ் தலைவராக இருந்தபோது அனைத்து இந்திய இளைஞர் காங்கிரஸ் மாநாடு நடந்தது. மாநாட்டில் வடநாட்டு பிரநிதிகள் இந்தியில் பேசினார்கள். கருநாடகத்தைச் சார்ந்த குண்டுராவ், தனது தாய்மொழியான கன்னடத்தில் பேசினார். அடுத்து தமிழ்நாட்டுப் பிரதிநிதியாகச் சென்ற குமரி அனந்தன் தமிழில் பேசினார். கமிட்டியில் இது பிரச்சினையானது. காமராசரிடம் இந்தப் பிரச்சினை வந்தபோது, பழ. நெடுமாறனை அழைத்து என்ன நடந்தது என்று கேட்டார். பழ. நெடுமாறன் நடந்ததைக் கூறினார். ‘நீ செய்ததுதான் சரி; சரியாகச் செய்தாய்’ என்றார் காமராசர். இதை பழ.நெடுமாறன் தனது நூலில் பதிவு செய்துள்ளார்.

காமராசருக்கு ஆங்கிலம் நன்றாகத் தெரியும். ஆங்கிலத்தில் பேசக் கூடியவர். மற்றவர்கள் கூறுவதுபோல் ஆங்கிலம் தெரியாதவர் அல்ல. அகில இந்திய காங்கிரஸ் தலைவராக அவர் இருந்தபோது, புவனேசுவரில் காங்கிரஸ் மாநாடு நடந்தது. ‘எனது தலைமை உரையை எனது தாய்மொழியால் நிகழ்த்துவேன். தேவைப்பட்டால் மொழி பெயர்ப்பாளரை வைத்துக் கொள்ளுங்கள்’ என்று நேருவிடம் கூறி விட்டார். அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டில் முதன்முதலாக தமிழில் தலைமை உரை நிகழ்த்திய பெருமை காமராசருக்குத்தான் உண்டு. (கைதட்டல்)

சேலத்தில் காமராசர் மீது மிகவும் பற்றுள்ள ஒரு பொறியாளர் எனக்கு நண்பர். அவர் அரசு அதிகாரியாக இருந்தாலும் காமராசரிடம் நெருக்கமாக இருந்தவர். 1967 தேர்தலில் காங்கிரஸ் தோல்விக்குப் பிறகு அவரிடம், காமராசர் தமிழக அரசியலில் மிகப் பெரிய அறிவாளி யார்? என்று கேட்டாராம். அதற்கு காமராசரே விடையும் கூறினார். பெரியார் தான் மிகச் சிறந்த அறிவாளி. நான் அகில இந்திய அரசியலுக்குப் போனபோது ‘தற்கொலை முயற்சி என்று பெரியார் தந்தி கொடுத்து எச்சரித்த அறிவாளி’ என்று காமராசர் கூறியதாக என்னிடம் கூறினார்.

**– கொளத்தூர் மணி உரையிலிருந்து**

*பசுவதைத் தடைச் சட்டம் கொண்டுவரக் கோரி காமராசரைக் கொல்ல ஆர்.எஸ்.எஸ். நிர்வாண சாதுக்கள் டெல்லியில் நடத்திய கொலை வெறியாட்டம் குறித்து பொதுச் செயலாளர் விளக்கினார். முதலில் பூரி சங்கராச்சாரி, டெல்லியில் பசுவதை தடைச் சட்டம் கோரி உண்ணாவிரதத்தைத் தொடங்கினார். 1966 நவம்பர் 7ஆம் தேதி காமராசர் வீட்டுக்கு தீ வைத்து வெறியாட்டம் போட்டார்கள். அதற்கு 3 நாட்களுக்கு முன் டெல்லியில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் இந்தப் போராட்டம் குறித்து பேசப்பட்டது. காமராசர் அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவர். அப்போது காமராசர் கூறினார், "இவர்கள் டெல்லியில் ஏன் போராட்டம் நடத்துகிறார்கள்; சென்னையில் போய் நடத்த வேண்டியது தானே?" என்று பேசியிருக்கிறார். "இவர்களுக்கு தைரியம் இருந்தால் சென்னையில் போய் நடத்தட்டும்; பெரியார் பார்த்துக் கொள்வார்" என்று கூறியவர் காமராசர். (கைதட்டல்)*

*ராஜாஜி 1966 பிப்.7ஆம் தேதி சென்னை கடற்கரையில் பேசும்போது, "தமிழ்நாட்டிலிருந்து சென்றுள்ள கருப்பு காக்கையை கல்லால் அடித்து வீழ்த்தினால் மற்ற காக்கைகள் தானே பறந்து ஓடிவிடும்" என்று காமராசரை கருப்புக் காக்கை என்று குறி வைத்துப் பேசினார்.*

**காமராசர் சந்தித்த கொலை மிரட்டல்கள்**

*டெல்லியில் காமராசர் வீடு தாக்கப்பட்ட அடுத்த 5 நாள்களில் காமராசருக்கு மிரட்டல் கடிதங்கள் வந்தன. "பசுவதை எதிர்ப்புப் போராட்டத்தின்போது எப்படியோ தப்பிவிட்டாய். ஆனால் நீ இனி உயிருடன் வெகு நாள்கள் இருக்க முடியாது" என்று அந்த மிரட்டல் கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது. 'சுதேசமித்திரன்', 'மெயில்' ஏடுகள் 13.11.1966 அன்று இந்தச் செய்தியை வெளியிட்டிருந்தன. ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் அதிகாரப்பூர்வ ஏடான 'ஆர்கனைசர்' 1.11.1966 அன்று வெளியிட்ட 'தீபாவளி' சிறப்பு இதழில் இவ்வாறு எழுதியது.*

*"அடுத்த 3 மாதங்களில் ஏதாவதொரு மிகப் பெரிய தேசிய நஷ்டம் ஏற்படலாம். தலைசிறந்த அரசியல் தலைவர் ஒருவரோ*

மாநில ஆட்சித் தலைவர் ஒருவரோ திடீரென மறைய (சாக) நேரலாம் எனத் தோன்றுகிறது. அல்லது விபத்தின் விளைவாக நாட்டின் மிகப் பெரும் தலைவர் ஒருவர் மரணமடைவார்" என்று எழுதியது.

ஆக, காமராசர் உயிருக்கு குறி வைத்து பார்ப்பன சதிவலை ஒன்று பின்னப்பட்டது. பெரியார் இதையெல்லாம் தொகுத்து, 'காமராசர் கொலை முயற்சி சரித்திரம்' என்ற நூலை வெளியிட்டார். காங்கிரசுக்காரர்கள் காமராசர் விழா என்ற பெயரில் அவரது படத்துக்கு மாலை போட்டுக் கொண்டிருப் பார்கள். பெரியார் மாறாக அவரது சாதனைகளை அவருக்கு உருவான பார்ப்பன எதிர்ப்புகளை பேசினார், எழுதினார். நூல்களாக்கி பரப்பினார்.

காமராசர், அகில இந்திய கட்சியில் இருந்தாலும் அவர் தமிழராக அதுவும் உணர்வுள்ள தமிழராக ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளைக் காக்கும் தமிழராக இருந்தார். இங்கே பேசிய பழ. கருப்பையா அவர்கள் கூறியதுபோல், "காமராசர் திராவிட இயக்கத்தின் பிள்ளை" தான். இந்த வரலாறுகளை நாம் மக்களிடம் கொண்டு செல்ல இத்தகைய விழாக்களைப் பயன்படுத்துவோம்" என்றார் கழகத் தலைவர் கொளத்தூர் மணி.

# ‘நீட்’டால் பயன் பெறுவது நகர்ப்புற மேல்தட்டு வர்க்கமே!

*ஏப்ரல் 30, 2018 அன்று பத்ரி நாராயணனின் 14ஆவது நினைவு நாளையொட்டி சென்னை, இராயப்பேட்டையில் நடந்த நிலம் பாழ்-நீர் மறுப்பு- நீட் திணிப்பு, தன்னாட்சி-தன்னுரிமை மீட்பு மண்டல மாநாட்டில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ‘நீட் திணிப்பு’ என்ற தலைப்பில் ஆற்றிய உரை.*

இந்த தன்மானம்-தன்னுரிமை மீட்பு மாநாட்டில் விவாதிப்பதற்கு ஆயிரக்கணக்கான செய்திகளை அள்ளி அள்ளி கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் பாரதிய ஜனதா கட்சிக்காரர்கள். 2014ஆம் ஆண்டு அவர்கள் ஆட்சி தொடங்கிய காலத்திலிருந்து மிக வேகமாக இந்த வேலையைச் செய்து கொண் டிருக்கிறார்கள். இதையெல்லாம் காங்கிரசு செய்யவில்லையா என்றால் அது நமக்குத் தேவையில்லை. அவர்கள் இருட்டில் திருடிக்கொண்டு போனார்கள். இவர்கள் பேருந்து நிலையத்தில் பட்டப் பகலில் கத்தியைக் காட்டி வெட்டுகிற கொலை காரர்களைப் போல மிகத் துணிச்சலாக மனிதாபிமானமற்றவர் களாக, எதையும் மதிக்காதவர்களாக செயல்பட்டுக் கொண் டிருக்கிறார்கள்.

புரட்சியாளர் அம்பேத்கர் மறைவதற்கு ஒரு ஆண்டுக்கு முன்னால், 1955 டிசம்பரில்தான் மொழிவழி மாநிலங்கள் பற்றிய சிந்தனையைப் பதிவு செய்தார். தென்னாடு கல்வியில் முன்னேறி யுள்ளது. வடநாடு பின் தங்கியுள்ளது என்று அவர் அதில் சொன்னார். அதை எப்படி சரி செய்வது என்பதற்கு பாரதிய ஜனதா கட்சிக்காரர்கள் வழியைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

வடநாட்டைப் போல தென்னாட்டையும் குறிப்பாக தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்களை கல்வியற்றவர்களாக மாற்றிவிட்டால் இதைச் சரி செய்து விடலாம் என்பதுதான் அவர்களின் திட்டமாக இருக்கிறது என்பதை நம்மால் பார்க்க முடிகிறது.

நுழைவுத் தேர்வு என்ற பெயரால், நீட் என்ற பெயரால் தகுதியுள்ள மாணவர்களை மருத்துவக் கல்லூரிகளில் சேர்த்து அதன் வழியாக மருத்துவத்தை மேம்படுத்த வேண்டும் என்று கருதியிருப்பார்களேயானால் முதலில் அவர்கள் செய்திருக்க வேண்டியது மத்திய அரசே நடத்திக் கொண்டிருக்கிற கல்வி நிலையங்களில்தான் நீட் தேர்வு நடத்தியிருக்க வேண்டும். எய்ம்ஸ், ஜிப்மர், பி.ஜி.எம்.ஐ. உள்ளிட்ட அவர்கள் நடத்துகிற எந்தக் கல்வி நிலையங்களிலும் நீட் தேர்வு கிடையாது. ஆனால் மாநிலங்கள் நடத்துகிற மருத்துவக் கல்லூரிகளின் சேர்க்கைக்கு மட்டும்தான் நீட் தேர்வு என்ற போதே, இவர்கள் எப்படிப்பட்ட மாணவர்களைத் தேர்ந்தெடுக்கப் போகிறார்கள் என்பதையும், அதற்கு அவர்கள் காட்டுகிற அக்கறையையும், அதில் புதைந் திருக்கிற வஞ்சனையையும் நம்மால் புரிந்துகொள்ள முடியும்.

கல்வியைப் பொறுத்தவரை அவர்களுடைய கொள்கை இட ஒதுக்கீட்டை ஒழித்துவிட வேண்டும் என்பதுதான். அதைச் செயல்படுத்துவதைத்தான் சிந்தனையாகவே கொண்டுள்ளார்கள். நாங்கள் ஒரு புது வகையான இட ஒதுக்கீட்டுக் கொள்கையை கொண்டுவரப் போகிறோம் என்று அவர்கள் தேர்தல் அறிக்கையிலேயே சொன்னார்கள். சமூக நீதி என்று மட்டுமில்லாமல் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்கும் இட ஒதுக்கீடு வழங்கப்படும், இது அரசியல் அதிகாரம் கொண்டதாகவும் இருக்குமென்று அவர்கள் தேர்தல் அறிக்கையில் சொன்னார்கள்.

இந்த இட ஒதுக்கீட்டுக் கொள்கை குறித்து அப்போது பாரதிய ஜனதா கட்சியின் செய்தித் தொடர்பாளராக இருந்த நிர்மலா சீதாராமனிடம் பத்திரிகையாளர்கள் விளக்கம் கேட்டார்கள். அதற்கு அவர் அளித்த பதில் அடுத்த நாள் இந்துவில் 'No quota, equal opportunity for all' (இட ஒதுக்கீடு இல்லை, எல்லோருக்கும் சம வாய்ப்பு) என்ற தலைப்பில் வெளியானது. எல்லோருக்கும் சம வாய்ப்பு என்று சொன்னால் யாருக்கு அந்த வாய்ப்பு கிடைக்கும் என்பதை நாமே அறிந்து கொள்ளலாம்.

இந்தியாவில் 100 பின்தங்கிய மாவட்டங்களைத் தேர்ந்தெடுத்து, அந்த மாவட்டங்களை எல்லா வகையிலும் உயர்த்துவதுதான் எங்களுடைய இட ஒதுக்கீட்டுக் கொள்கை என்று அவர்கள் சொன்னார்கள். இப்போது மெல்ல மெல்ல அவற்றையெல்லாம் செயலில் காட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

இவர்கள் ஆட்சிக்கு வந்து சில மாதங்களில் உலக இந்துக்கள் மாநாடு ஒன்றை விசுவ இந்து பரிசத் நடத்தியது. அந்த மாநாட்டில் அவர்களுக்கு எதிரிகளாக சிலரை அடையாளப் படுத்தினார்கள். கிறித்துவர்கள், முஸ்லிம்கள், மதச்சார்பின்மை பேசுகிற நம்மைப் போன்றவர்களை எப்போதுமே எதிரிகளாகச் சொல்லுவார்கள். இப்போது மார்க்சியம் மெக்காலேயிசம் என்ற புதிய எதிரியைச் சேர்த்திருக்கிறார்கள்.

நீட் தேர்வு எப்படி நடத்தப்படுகிறது என்பதைப் பலரும் அறிந்திருப்பீர்கள், அதை விளக்கத் தேவையில்லை. நம்முடைய கல்வி முறையில் மூளையின் படம் வரைந்து, பாகங்கள் குறித்து, செயல்பாடுகளை விளக்கு என்று கேள்விகள் கேட்பார்கள். இவ்வாறு விளக்கி எழுதுகிற (Descriptive Anawer) முறையில்தான் தேர்வு இருக்கும். ஆனால் இவர்கள் இப்போது நீட் தேர்வில் objective முறையைக் கொண்டு வந்து இருக்கிறார்கள். இதில் நான்கு பதிலை அவர்களே அளித்திருப்பார்கள். ஏதேனும் ஒன்றை டிக் செய்தால் போதும். இதற்கெல்லாம் அறிவு வேண்டாம், அதிர்ஷ்டத்தில் கூட வர இயலும் என்பதை சிலர் விளக்கியிருக் கிறார்கள்.

இதுகூட பரவாயில்லை, நம் மாணவர்கள் பார்க்காத புதிய முறை ஒன்றையும் கொண்டு வந்தார்கள். சரியாக எழுதினால் மதிப்பெண், இல்லாவிட்டால் மதிப்பெண் இல்லை என்பதுதான் இதுவரையில் இங்கு இருக்கிற முறை. ஆனால் தவறாக எழுதினால் மதிப்பெண்ணைக் குறைப்போம் என்ற முறையையும் இதில் கொண்டு வந்தார்கள். கேள்வித்தாள்கள் கூட நம் மாணவர்கள் படித்த பாடத் திட்டங்களிலிருந்து கிடையாது. நம் மாணவர்கள் இங்குப் படித்தது சமச்சீர் கல்வித் திட்டத்தில். அதிலிருந்து கேள்விகள் கிடையாது. உயர் ஜாதி, நகரத்துப் பணக்கார மாணவர்கள் மட்டுமே படிக்கிற சி.பி.எஸ்.சி. கல்வி முறையிலிருந்து தான் கேள்வி கேட்கிறார்கள். உலகின் எந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் இந்த நீட் தேர்வை

எழுதலாம். இப்படிப்பட்ட நிலையில்தான் நம் மாணவர்கள் நீட் தேர்வை எழுதுகிறார்கள்.

கடந்த ஆண்டில் இந்தத் தேர்வை எழுதியவர் களில், 6,09,820 இந்தியர்களும், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள் 1,826 பேரும், இந்திய வம்சாவளித் தமிழர்கள் 42 பேரும் தேர்வாகி யிருக்கிறார்கள். இதில் வெளிநாட்டுக்காரர்கள் 245 பேர் தேர்ச்சியடைந்து இருக்கிறார்கள். நம்முடைய வரிப்பணத்தில் நம் மாணவர்கள் படிக்க நம்முடைய மாநில அரசு கட்டிக்கொடுத்த அரசு மருத்துவக் கல்லூரிகளில் இப்போது நம்முடைய மாணவர்களுக்கு மட்டும் தான் இடம் கிடைக்கும் என்று நிலைமை பறிபோயிருக்கிறது.

ஒருபக்கம் பார்த்தால் தமிழ்நாட்டின் வளங்களுக்காக உழைக்கிற, தமிழ்நாட்டுக் கிராமப்புற மக்களின் குழந்தை களுடைய மருத்துவர் ஆவதற்கான கல்வி உரிமைகள் பறி போயிருக்கிறது. இது தனிப்பட்ட நபர்களைச் சார்ந்தது. ஆனால் இந்தத் தேர்வை எழுதுபவர்கள் நகரத்துப் பணக்கார வீட்டுக் குழந்தைகள். தனிப்பயிற்சிக்கு பணம் செலுத்த வாய்ப்புள்ளவர்கள் தான் எழுத முடியும் என்ற நிலை வந்துவிட்டது.

“இன்று நம் நாட்டில் உள்ள பரீட்சை முறை என்பது மாணவர்களுடைய அறிவைச் சோதிப்பதாக இல்லை, அவர்களுடைய நினைவு சக்தியைச் சோதிப்பதாகத்தான் உள்ளது. இந்த முறையை மாற்ற வேண்டும்” என்று ஆகஸ்ட், 1925ஆம் ஆண்டில் பெரியார் சொன்னார். காலம் காலமாக மந்திரம் சொல்லுபவனுக்குத்தான் இது வாய்ப்பாக இருக்கும். கல்வியே கண்டிராத நம் மாணவர்களுக்கு இது எப்படிப் பயன்படும்? என்பதுதான் அவருடைய கேள்வியாக இருந்தது. ஆனால் அந்தக் கல்வி முறையையும் மெல்ல மெல்ல உள்வாங்கி அதில் வெற்றி பெறத் தொடங்கினோம். 2016ஆம் ஆண்டு மருத்துவக் கல்லூரி தேர்வில் 200க்கு 200 மதிப்பெண்களை 17 பேர் வாங்கியுள்ளனர். இதில் 2 பேரைத் தவிர மற்ற அனைவரும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள். மற்ற இரண்டு பேரில் ஒருவர் இட ஒதுக்கீடு கேட்காத இசுலாமிய தந்தைக்கும், கிறித்துவ தாய்க்கும் பிறந்த திராவிடன் என்ற மாணவர். பெயரைப் பார்க்கும்போதே அவர் யார் என்பது புரிந்திருக்கும். மற்றொருவரும் பார்ப்பனர் இல்லை. நம்

மாணவர்கள் 200க்கு 200 பெறுவார்கள் என்ற வாய்ப்பு வந்தவுடன் அவர்களுக்குக் கண்ணை உறுத்துகிறது. இதை எப்படியாவது ஒழித்துக் கட்ட ஒழித்துக் கட்ட வேண்டுமென்று முடிவெடுத் திருக்கிறார்கள்.

கோட்டாவை ஒழிப்பதுதான் எங்கள் கொள்கை என்றார்கள். வரலாற்று ரீதியாக வாய்ப்பு மறுக்கப்பட்ட நம்மவர் களுக்குத்தான் கோட்டா. அதில் வெற்றி பெறுவது ஒருபக்கம். முதலில் அதனால் பலன் பெறுவது யார்? அய்.அய்.டியில் படிக்கின்றவர்கள் யார் என்று பார்க்க வேண்டியுள்ளது. படித்து முடித்தவுடன் அவர்கள் இந்தியாவில் பணியாற்றுகிறார்களா? கல்வி கற்ற பகுதியில் பணியாற்றுகிறார்களா என்றால் கிடையாது. 80 விழுக்காட்டுக்கு மேல் அயல்நாட்டுக்குப் பறந்துவிடுகிறார்கள். அப்படிப்பட்ட வர்க்க நிலைகளைச் சேர்ந்தவர்கள்தான் அங்குப் படிக்கிறார்கள்.

அதேபோல இப்போது நீட்டில் தேர்ச்சி பெறுபவர்களும் பெரும்பாலும் அப்படிப்பட்ட வர்க்க நிலைகளைச் சேர்ந்தவர் களாகத்தான் உள்ளார்கள். இவர்களும் வெளிநாட்டுக்குச் செல்லவும், நகரத்தில் மருத்துவமனை நிறுவுவதற்கும் தான் வருவார்களே தவிர கிராமத்திற்கு வர மாட்டார்கள். இன்னொரு பக்கம் சமூகப் பார்வையில் பார்த்தோமானால், நாம் தமிழகம் முழுவதும் தட்டுத்தடங்காமல் பெற்று வந்த மருத்துவ சேவை பறிபோகிறது. கிராமத்து மக்களுக்கு, ஏழை மக்களுக்கு, உழைக்கும் மக்களுக்கு மருத்துவ சேவை எதிர்காலத்தில் மறுக்கப்படப் போகிறது.

நீ மருத்துவரானால் என்ன செய்யப் போகிறாய் என்று அனிதாவிடம் கேட்டார்கள். "எங்க அம்மாவுக்கு போதிய மருத்துவம் கொடுக்க முடியாததால் இறந்து போனார். நான் இந்த ஊரில் மருத்துவமனை கட்டி மருத்துவம் செய்வேன்" என்றார் அனிதா. அரியலூரிலிருந்து எங்கோ தொலைவில் இருக்கிற குழுமூரில் மருத்துவமனை கட்டி அந்தப் பகுதி மக்களுக்கு மருத்துவம் பார்க்க வேண்டும் என்ற சிந்தனை நம் வீட்டுப் பிள்ளைகளுக்குத்தான் இருக்கிறது. இந்த சிந்தனை நகரத்தைச் சேர்ந்த பணக்கார வீட்டுப் பிள்ளைகளுக்கு இருக்குமா?

முதுநிலை மருத்துவம் படிப்பதற்கு நம் அரசு கட்டிய மருத்துவக் கல்லூரிகளில் 50 விழுக்காடு இடங்களை மத்திய

அரசுக்கு அளிக்க வேண்டும். இந்த ஆண்டு மத்திய அரசு அந்த 50 விழுக்காடு இடங்களில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடே வழங்கவில்லை. இப்போது அதைப் பற்றி பேசுவதற்குக் கூட இங்கு ஆட்கள் இல்லை. பிற்படுத்தப்பட்டவர்களுக்கு மத்திய அரசில் மிக நீண்டகாலமாக இட ஒதுக்கீடு இல்லாமல் இருந்தது. 1951 முதல் அரசியல் சட்டத்திருத்தமே கல்வி நிலையங்களில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீட்டை வழங்கிவிட்டது.

ஆனால் மத்திய அரசின் கல்வி நிலையங்களுக்கு என்று தனியாக ஒரு சட்டம் 2006ஆம் ஆண்டில் தேவைப்பட்டது. அதுவரைக்கும் மத்திய அரசின் கல்வி நிலையங்களில் இட ஒதுக்கீடு இல்லாத நிலை நீடித்தது. பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடு என்பது மண்டல் குழு அமைத்து, விபி சிங் ஆட்சிக்கு வந்த பின்னர்தான் கிடைத்தது. இதற்குக் கிட்டத்தட்ட அய்ம்பது ஆண்டுகள் ஆகிவிட்டது. அதை முழுவதுமாக நிறைவேற்றும் முன்னாலேயே மறுத்துவிட்டார்கள். இப்போது இதர பிற்படுத்தப்பட்டவர்களுக்கான இட ஒதுக்கீடே இல்லை என்று சொல்லிவிட்டார்கள். என் வீட்டுப் பிள்ளையை தாழ்த்தப்பட்டவன் திருமணம் செய்து கொண்டான் என்று மீசையை முறுக்கும் யாராவது, எந்த ஜாதி சங்கமாவது என்னுடைய ஜாதிக்கு எப்படி இட ஒதுக்கீட்டை மறுத்தாய் என்று பேச முன் வந்தார்களா என்றால் இல்லை. ஜாதி கூடாது, இல்லை என்று பேசுகிற நாம்தான் முன்வந்திருக்கிறோம்.

இட ஒதுக்கீடு இல்லை, எல்லோருக்கும் சம வாய்ப்பு என்று பா.ஜ.க. தேர்தல் அறிக்கையில் சொன்னதைத் தான் இப்போது மெதுவாகக் கொண்டு வந்து கொண்டிருக்கிறார்கள். மருத்துவத்தில் முதுநிலை படிப்பவர்கள் குறைந்தது அரசிடம் ஐந்து ஆண்டுகள் பணிபுரிய வேண்டும். ஆனால் இப்போது, காலம் முழுவதும் செய்ய வேண்டுமென்றும் கூறுகிறார்கள். அதுகுறித்து நமக்குத் தெரியாது. இவர்கள் அரசு மருத்துவமனையில் தொடர்ந்து பணியாற்றாவிட்டால் 45 லட்சம் ரூபாய்க்கு பாண்ட் எழுதி கொடுத்துவிட்டுத் தான் வெளியே செல்ல வேண்டும். அதனால் நமக்கு மருத்துவர்களாக, அறுவை சிகிச்சை நிபுணர்களாக, உயர் சிகிச்சை மருத்துவர்களாக நம் மருத்துவமனைகளுக்கு மருத்துவர்கள் கிடைக்கிறார்கள். ஆனால்

இனிமேல் நீட் அவர்களைக் கொடுக்குமா என்று தெரியாது. நீட் தேர்வில் தேர்வு பெறுபவன் அதற்குத் தயாராக இருப்பானா என்று நமக்குத் தெரியவில்லை.

நீட் தேர்வு நடக்கும் முறையைப் பற்றி சொன்னால் சொல்லிக் கொண்டே போகலாம். முன்னதாக தனியார் மயம் என்று கூறினார்கள். தனியார் மயம் என்றால் அதற்குப் பார்ப்பன மயம் என்று பொருள். இப்போது அகில இந்திய தேர்வு என்கிறார்கள். அகில இந்திய தேர்வு என்றால் அதற்கு வடவர்கள் மயம் என்று பொருள். அகில இந்திய தேர்வு என்று வருகிற போதெல்லாம் அதில் வட நாட்டவர்கள்தான் ஆதிக்கம் செலுத்துகிறார்கள். குறிப்பாக அஞ்சல் துறைக்கு அகில இந்திய தேர்வை நடத்தினார்கள். தமிழ்நாட்டில் அஞ்சல் கொடுக்க வேண்டுமென்றால் தமிழில் முகவரியைப் படிக்கத் தெரிய வேண்டும். அதனால் தமிழுக்கு 25 மதிப்பெண்கள் கொடுக் கிறார்கள். இதில் மகாராஷ்டிரத்தைச் சேர்ந்தவனும், அரியானாவைச் சேர்ந்தவனும் 25 மதிப்பெண்ணுக்கு 25 மதிப்பெண்கள் வாங்கினார்கள்.

தமிழ்நாட்டில் குழந்தைப் பருவம் முதல் தமிழில் பேசி, தமிழில் படித்தவர்கள் யாரும் 18 மதிப்பெண்ணுக்கு மேல் வாங்கவில்லை. இதில் அஞ்சல் துறைக்கே அய்யம் வந்து அந்தத் தேர்வை ரத்து செய்துவிட்டார்கள். வட இந்தியாவில் இப்படித் தான் தேர்வுகள் நடக்கிறது. அகில இந்தியத் தேர்வை எல்லா வற்றுக்கும் கொண்டு வந்துவிட்டார்கள். இங்கு வேலைக்கு வருபவர்களும் வட நாட்டவர்கள்தான் அதிகம் வந்து கொண் டிருக்கிறார்கள்.

நீட்டுக்கு ஒரே நாடு, ஒரே தேர்வு என்றார்கள். குஜராத்தில் தேர்வு எளிமையாக இருந்தது என்றும், மேற்கு வங்கத்தில் கடுமையாக இருந்தது என்றும், தமிழ்நாட்டில் ஆங்கில கேள்வித்தாள் கடினமாக இருந்தது, தமிழ் கேள்வித் தாள் கொஞ்சம் பரவாயில்லை என்றும் செய்தித்தாள்களில் செய்திகள் வெளியானது. இது எப்படி ஒரே தேர்வாகும்? ஒரே தேர்வு என்றால் ஒரே கேள்வித்தாள்தான் இருக்க வேண்டும். ஒரு மொழிக்கு ஒரு கேள்வித்தாள். அதில் ஒன்று கடினமாகவும், ஒன்று எளிமையாகவும் இருக்குமென்றால் அதற்கு என்ன அகில இந்தியத் தேர்வு என்று பொருள் என்பதுதான் நமது கேள்வி.

*இந்த முறைகள் அனைத்தும் முதல் தலை முறையாக, இரண்டாவது தலைமுறையாக கல்வி பெற்று வருகிற நமது கிராமத்துப் பிற்படுத்தப்பட்ட, பழங்குடியின மற்றும் பட்டியலின மக்களின் கல்வி வாய்ப்பைப் பறிப்பதற்கான மற்றும் எளிய மக்கள் தொடர்ந்து பெற்று வருகிற மருத்துவ சேவைகளை நிறுத்துவதற்கான முயற்சியாகத்தான் பார்க்க வேண்டும்.*

*இது மட்டுமில்லை, அனைத்துப் பணிகளுக்குமான பணியாளர் நியமனத் தேர்வுகளில் நடந்து வருகிற முறைகேடுகள் கொஞ்ச நஞ்சமல்ல. நீட் தேர்விலும் கிராமத்து மாணவர்கள்தான் அதிகம் பாதிப்படைவார்கள் என்று நாம் சொன்னோம். அதுபோலவே இந்த ஆண்டு நீட் தேர்வில் கிராமத்து மாணவர்களைவிட நகரத்து மாணவர்கள்தான் அதிகம் தேர்ச்சி பெற்றுள்ளனர்.*

*சென்னையில் நீட் இல்லாமல், மதிப்பெண் அடிப்படையில் மருத்துவ மாணவர் சேர்க்கை இருந்தபோது 113 பேர் சேர்ந்தார்கள். நீட் வந்த பிறகு சென்னை நகரத்தைச் சார்ந்தவர்கள் இந்த ஆண்டு 471 பேர் சேர்ந்திருக்கிறார்கள். வேலூரில் 54 பேர்தான் நீட் தேர்வுக்கு முன்பு சேர்ந்திருந்தார்கள். நீட் வந்த பிறகு இந்த ஆண்டு 153 பேர் சேர்ந்திருக்கிறார்கள். கோயம் புத்தூரில் நீட் தேர்வுக்கு முன்பு 102 பேராக இருந்தவர்கள் இந்த ஆண்டு 182 பேராக அதிகரித்து விட்டார்கள். ஒவ்வொரு நகரத்திலும் இப்படித்தான் நீட் வந்த பிறகு நகர்ப்புற மருத்துவ மாணவர்கள் எண்ணிக்கை அதிகரித்து விட்டது.*

*ஆனால் கிராமத்தைப் பார்த்தோமானால், ஈரோட்டில் நீட் தேர்வுக்கு முன்பு 230 பேர் சேர்ந்திருந்தார்கள். ஆனால் இந்த ஆண்டு 100 பேர் மட்டும்தான் தேறியிருக்கிறார்கள். தருமபுரியில் 225 பேர் நீட் தேர்வுக்கு முன்பு தேர்ச்சி பெற்றிருந்தார்கள். நீட் வந்த பிறகு 82 பேர்தான் சேர்ந்திருக்கிறார்கள். கிருஷ்ணகிரியில் நீட் தேர்வுக்கு முன்பு 338 பேரும், நீட் தேர்வுக்குப் பிறகு 82 பேரும் சேர்ந்திருக்கிறார்கள்.*

*பின்தங்கிய மாவட்டங்களிலும், கிராமங்களிலும் மருத்துவ படிப்புக்குத் தேர்வாகும் மாணவர்கள் நீட் வந்த பிறகு பாதிக்கும் குறைவாக குறைந்திருக்கிறார்கள் என்பததைத்தான் இது காட்டுகிறது. இதனால் சில ஆண்டுகள் கழிந்த பின்னால்*

கிராமத்திலிருந்து மருத்துவர் இல்லாத நிலையும், கிராமத்து மக்களுக்கு மருத்துவம் கிடைக்காத நிலையும் ஏற்படும். இப்படிப்பட்ட வஞ்சகம் நிறைந்த தேர்வைப் பற்றி நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

சி.பி.எஸ்.சிதான் நீட் தேர்வை நடத்துவதாகக் கூறினாலும், இந்தத் தேர்வை அவர்கள் நடத்தவில்லை. ப்ரோ மெட்ரிக் என்ற அமெரிக்க நிறுவனம் தான் நீட் தேர்வை நடத்துகிறது. இந்த நிறுவனம் துணை ஒப்பந்தம் போட்டு சி.ஏ.எஸ்.அய்.டி சர்வீஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்குக் கொடுத்து விட்டார்கள். இந்த நிறுவனம் ஒரு துணை ஒப்பந்தம் போட்டு மெசெர்ஸ் அபெக்ஸ் சர்வீஸ் லிமிடெட் நிறுவனத்துக்குக் கொடுத் துள்ளார்கள். முதுநிலை மருத்துவத்திற்கு கணினியில் தேர்வு நடக்கும். சில இடங்களில் இணைய வசதி அளிக்கப்பட்டு, இணையத்தில் பதிலைத் தேடி தேர்வெழுதி யுள்ளார்கள். ஆம்மி அட்வின் (Ammyy admin) என்ற செயலி வசதியைப் பயன்படுத்தி தேர்வெழுதி யுள்ளார்கள். இந்த முறையில் வெளியில் இருந்தும் செயலியை இயக்க முடியும். (அப்படியானால் தேர்வுக்கான விடையை வெளியிலிருந்து ஒருவர் கணினியைப் பயன்படுத்தி எழுதி அறையில் தேர்வு எழுதும் மாணவருக்கு அனுப்பி வைக்க முடியும்) இப்படி மோசடியாக தேர்வு எழுதி, பலர் மருத்துவராகி யுள்ளனர் என்பது இப்போதுதான் கண்டுபிடிக்கப் பட்டதாகச் சொல்கிறார்கள்.

அதனால் எங்களுக்கு இதுபோன்ற மோசடி நடைமுறைகள் ஏதும் வேண்டாம். எங்கள் மருத்துவக் கல்லூரிகளில் எங்கள் மாணவர்களை சேர்த்துக் கொள்கிறோம் என்று கூறுகிறோம். இதற்குச் சட்டப்பூர்வமான விளக்கங்களை முந்தைய நீதிபதிகள் கொடுத்திருக்கிறார்கள். இப்போது தீர்ப்பு எழுதுகிற நீதிபதிகள் அதிக மதிப்பெண் வாங்கிய மாணவர்கள்தான் ஏதோ அறிவாளிகள் போல கருதுகிறார்கள். இதற்கு ஒரு விளக்கத்தை பிபி.சாவந்த் என்கிற நீதிபதி மண்டல் கமிசனுக்குத் தீர்ப்பு எழுதுகிறபோது சொன்னார். "அம்பேத்கர் மெட்ரி குலேசன் தேர்வில் 37½ விழுக்காடு மதிப்பெண்கள் தான் வாங்கினார். ஆனால் அவரைவிட அறிவாளி இந்தியாவில் யார் இருக்கிறார்கள்? சொல்லுங்கள்" என்று தனது தீர்ப்பிலேயே சாவந்த் எழுதினார்.

*கல்வி கற்கத் தொடங்கிய அந்தத் தொடக்க காலத்தில் அவ்வளவு மதிப்பெண்தான் வாங்க இயலும். ஆனால் இப்போதிருக்கிற நீதிபதிகள் பற்றியும் குறிப்பிட வேண்டும். நீட் கூடாது என்று 2013ஆம் ஆண்டு ஜூலை மாதத்திலேயே தலைமை நீதிபதி உள்ளிட்ட மூன்று நீதிபதிகள் அடங்கிய அமர்வால் தீர்ப்பு வழங்கப்பட்டு விட்டது. ஆனால் 2016ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில்தான் சீராய்வு மனு தாக்கல் செய்தார்கள். ராஜீவ் வழக்கில் தண்டனை பெற்றவர்கள் சீராய்வு மனு தாக்கல் செய்தபோது அதே நீதிபதிகளிடம் சீராய்வு மனுவின் விசாரணையும் சென்றது. அதே நீதிபதிக்குத் தான் அதில் உள்ள பிழைகளை சுட்டிக் காட்டினால் தெரியுமென்று இவ்வாறு செய்தார்கள். ஆனால் நீட் தேர்வுக்கு 2013ஆம் ஆண்டு தீர்ப்பு வழங்கிய தலைமை நீதிபதி அல்டாமிஸ் கபிர் அதே ஆண்டில் ஓய்வு பெற்றுவிட்டார்.*

*31.12.2015ஆம் தேதி இன்னொரு நீதிபதி விக்ரம் அஜித் சென் ஓய்வு பெற்றுவிட்டார். இவர்கள் இருவர் மட்டும்தான் 2013ஆம் ஆண்டில் நீட் தேர்வு கூடாது என்று தீர்ப்பு வழங்கினர். மற்றொருவரான அணில் தவே என்ற குஜராத்தை சேர்ந்த நீதிபதி மட்டும்தான் அப்போது நீட் தேர்வு வேண்டுமென்றார். அவரிடம் தான் மறு சீராய்வு மனு சென்றது. இவரைப் பற்றி மற்றொன்றையும் சொல்ல வேண்டும். "நான் மட்டும் சர்வாதிகாரியாக இருந்தால் கீதையை தொடக்கப் பள்ளியிலிருந்து பாடமாக வைப்பேன்" என்று சொன்னவர்தான் இந்த அணில் தவே (இவர் ஒரு பார்ப்பனர்).*

*மறு சீராய்வு மனு சென்ற முதல் நாளே, இந்த மனுவை விசாரித்துத் தான் தீர்ப்பு சொல்ல வேண்டும். அப்படித் தான் சட்டமும் சொல்கிறது என்று கூறிவிட்டு, பிறகு அவரே விசாரணை முடிந்து தீர்ப்பு வரும் வரையில் 2013ஆம் ஆண்டு வழங்கப்பட்ட தீர்ப்பை (நீட் தேர்வு கூடாது என்ற தீர்ப்பை) நிறுத்தி வைப்பதாகவும் கூறினார். தமிழகத்தில் உள்ள 69 விழுக்காடு இட ஒதுக்கீடு குறித்த வழக்கு ஒன்றை விஜயன் என்பவர் 1995ஆம் ஆண்டில் உச்ச நீதிமன்றத்தில் தொடுத்தார். 2018 வரையில் அந்த வழக்கு இன்னமும் விசாரணைக்கே வரவில்லை.*

அதுபோலத்தான் நீட் தேர்வு வேண்டாமென்ற தீர்ப்புக்கு அணில் தவே பிறப்பித்த இடைக்கால தடை உத்தரவும் மீண்டும் எப்போது விசாரணைக்கு வருமென்று தெரியாது. இதை எதிர்பார்த்துக் காத்திருந்தால் நமக்கு நீதி கிடைக்குமா? அடுத்து நாம் என்ன செய்ய வேண்டுமென்று யோசிக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது. தன்மானம் மீட்பதற்கு தன்னுரிமை கொண்ட தமிழ்நாடாக இருந்தால் நமது சிக்கலை நாமே தீர்த்துக் கொள்ளலாம்.

'நீ வேறு மொழி பேசுகிறாய், நான் வேறு மொழி பேசுகிறேன். உன் உணவு முறை வேறு, என் உணவு முறை வேறு; உன் உடை வேறு, என் உடை வேறு; ஆறாயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள ஆங்கிலேயனா என்னை ஆள்வது' என காங்கிரஸ் ஆங்கிலேயர்களிடம் கேட்டது. பெரியார் காங்கிரஸ் காரர்களைப் பார்த்துக் கேட்டார், "நாங்களும் அதையேத்தான் கேட்கிறோம். இரண்டாயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ளவனா எங்களை ஆள்வது? மைல்தான் நான்காயிரம் குறைந்துள்ளது தவிர உனக்கும் எனக்கும் வேறு என்ன மாறிவிட்டது?" என்று. இப்போது அதே கேள்வியை நாமும் கேட்க வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

எங்கள் பண்பாடு அறியாத, எங்கள் உணர்வுகள் புரியாத, எங்களுடைய நடைமுறைகள் தெரியாத, தமிழ் நாட்டு மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாத அல்லது புரிந்துகொள்ள மறுக்கிற வடவர்களோடு இணைந்திருக்க வேண்டுமா என்ற கேள்விக்கு பெரியார் 1938ஆம் ஆண்டிலேயே பதில் சொன்னார். இப்போது 2018ஆம் ஆண்டில் நாம் மீண்டும் கேட்டுக் கொண் டிருக்கிறோம். இத்தனை ஆண்டுகள் நாம் தள்ளிப்போனது போதும். விரைவில் முடிவெடுப்போம், என்றார் கழகத் தலைவர் கொளத்தூர் மணி.

●●

இந்நூலிலிருந்து...

அம்பேத்கரின் இந்துமத எதிர்ப்பு – காந்தியார் எதிர்ப்பின் நோக்கங்களையும் ‘காமராசர் தேசிய அடையாளத்தைத் தவிர்த்து, ‘தமிழராக’வே செயல்பட்டதையும் ‘நீட்’ கிராமப்புற ஏழை மாணவர்களுக்குஎதிரானதோடு உச்சநீதிமன்றம் இதில் மோசடியாக செயல்பட்டதையும் விளக்குகிறார், திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி.

முதல் பதிப்பு : 2018

நன்கொடை : ரூ.20

வெளியீடு
திராவிடர்
விடுதலைக் கழகம்